[1981 பிப்ரவரி 10

வரை ப்ளூ கலரிலும், 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பேருந்துகள் சிவப்பு நிறத்திலும் இருக்க வேண்டும் என்ற அடிப்படையிலே தான் அவ்வாறு செய்யப்பட்டிருக்கிறது. அதாவது இவற்றின் நிறங்களைப் பார்த்தவுடனே பழைய பஸ்களை மாற்ற வேண்டும் என்ற உணர்வு வரவேண்டும் என்ற காரணத்திற்காகத்தான் இவ்வாறு மூன்று நிறங்களில் பேருந்துகள் ஓடிக்கொண்டிருக் கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவில்லிபுத்தூரில் கைத்தறி வளர்ச்சி கழகத்தின் உற்பத்திக் கிளை

*வினா எண். 278.—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கைத்தறி, கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் திருவில்லிபுத்தூர் நகரில் கைத்தறி நிதி அண்டு வியாபார கார்ப்பரேஷனிலிருந்து கைத் தறி உற்பத்தி சென்டர் ஆரம்பிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

(இ) கைத்தறி உற்பத்தி சென்டர் ஆரம்பிக்க எத்தனை மனு வந்துள்ளன?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) தமிழ்நாடு கைத்தறி நிதி மற்றும் வியாபார கார்ப்பரேஷன் தற்போது பெயர் மாற்றம் செய்யப்பட்டு 'தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம்' என்று இயங்கி வருகிறது. இக்கழகம் தற்பொழுது கைத்தறித் துணி வியாபாரத்தை மேற்கொள்வதை நிறுத்திவிட்டது. ஆகையால் திருவில்லிபுத்தூரில் இக்கழகத்தின் உற்பத்திக் கிளை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, இந்த கைத்தறி உற்பத்தி சென்டரின் நோக்கம் என்ன? இதற்கு அரசு எவ்வளவு மதிப்பீடு செய்துள்ளது. இது மத்திய அரசின் திட்டமா அல்லது மாநில அரசின் திட்டமா? எவ்வளவு பேருக்கு இதனால் வேலை வாய்ப்பு கிடைக்கும்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவரவர் களே, கைத்தறி வளர்ச்சிக் கழகம் என்பது தமிழகத்திலே காஞ்சி, ஈரோடு, சேலம், கரூர், மதுரை மற்றும்

1981 பிப்ரவரி 10]

குறிஞ்சிப் பாடி ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றது. குறிஞ்சிப்பாடி, கரூர் ஆகிய இரண்டு இடங்களில் இயங்கி வருகின்றவை மத்திய அரசின் முழு நிதியுதவியோடு வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்ற துணி ரகங்களை உற்பத்தி செய்கின்றன. மற்ற நான்கு இடங்களில் இயங்கி வருபவை மாநில, மத்திய அரசுகளின் நிதியுதவியோடு கைத்தறி துணிகளை உற்பத்தி செய்து வருகிறது. இவை அனைத்தும் கைத்தறிக் கழகமாக மாற்றப்பட்டு கூட்டுறவு இயக்கமாகக் கொண்டு வரப் பட்டிருக்கின்றது. இக்கழகம் தயாரிக்கின்ற துணிகளை கோ-ஆப் டெக்ஸ் 50 சதவீதம் கொள்முதல் செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, இந்த அலுவலகத்தை சுமார் 6 மாதத்திற்கு முன்பே ஸ்ரீவில்லிப்புத்தூரில் ஆரம்பிப்பதாக இருந்தது. ஆனால் இடம் கிடைக்க வில்லை என்று கூறி அதிகாரிகள் காலதாமதம் செய்கிறார்கள். ஆகவே விரைவில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அதற்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவரவர்களே, இந்தக் கழகம் 1964-ல் ஆரம்பிக்கப்பட்ட பின்பு 19-1-78-ல் கைத்தறி வளர்ச்சிக் கழகமாக மாற்றியமைக்கப் பட்டிருக்கிறது. ஸ்ரீவில்லிப்புத்தூரில் எந்தவிதமான கிளைக் கழகமும் ஆரம்பிப்பதற்கான செயற் குறிப்பே இல்லை. ஆகவே, அதற்கான நிதி ஒதுக்கீடு பற்றியும் குறிப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கைத்தறி துணிகள் ஏற்றுமதி

* வினா எண். 279— திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு கைத்தறி கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலிருந்து 1979-80, 1980-81 ஆண்டுகளில் வெளிநாட்டிற்கு எத்தனை ரூபாய் பெறுமான துணிகளை அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது ?

(ஆ) வெளிநாட்டிற்கு கைத்தறித் துணிகளை அனுப்பு வதில் தேக்கம் ஏற்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) 1979-80 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலிருந்து ரூ. 56.35 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள் ளன.